**<u>மன்றப்பொருள்</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய வளாகத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு 2018–2021–ம் ஆண்டிற்கு (மூன்றாண்டு தொகுப்பு) 28.03.18ல் 5–ம் அழைப்பாக மறு பொது ஏலம் மறு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி மறு பொது ஏல கேள்வி கோரியதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

| வ. எண். | பெயர் மற்றும் முகவரி | மறு பொது ஏலம் கோரிய தொகை |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.தங்கம் சந்தோஷ் த/பெ தங்கசேகர், எண்.4/3 முத்துவேல் லே–அவுட், 7வது தெரு, கே.கே.ரோடு, விழுப்புரம் | ரூ.25,00,000/– |
| 2 | திரு.கே.ரகுராமன், எண்.168எ, சீனுவாசா நகர், சாலாமேடு, விழுப்புரம் | ரூ.24,75,000/– |

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. 1–ம் அழைப்பு 14.02.2018–ல் நடத்தப்பட்டதில் ஒருவர் மட்டும் முன் வைப்புத் தொகை செலுத்தி பொது ஏலத்தில் கலந்து கொண்டு ஏலம் கோர முன்வரவில்லை.
   2–ம் அழைப்பு மறு பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி 28.02.2018 மறு பொது ஏலம்/மறு ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்துக்கொள்ளவில்லை.
   3–ம் அழைப்பு மறு பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி 07.03.2018 இரண்டு நபர்கள் கலந்து கொண்டு அரசு மதிப்பு நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கு கூடுதலாக ஏலம் கோர முன் வரவில்லை
   4–ம் அழைப்பு மறு பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி 16.03.2018 பொது ஏலத்தில் இருவர் கலந்துக்கொண்டு ஏலம் கோர எவரும் முன் வரவில்லை

2) மேற்கண்ட இனத்திற்கு 5–வது முறை பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில் 5வது அழைப்பில் திரு.எஸ்.தங்கம் சந்தோஷ், எண்.4/3 முத்துவேல் லே–அவுட் 7–வது தெரு கே.கே.ரோடு, விழுப்புரம் என்பவர் கோரிய அதிக பட்ச ஏலக்கேள்வி ரூ.25,00,000/–ம் கடந்தாண்டு குத்தகைத் தொகையைவிட ரூ.6,46,535/–ம் கடந்த 3 ஆண்டு குத்தகை சராசரியை விட ரூ.4,99,078/–ம் குறைவாகவும் உள்ளது.

3) மேற்கண்ட குத்தகை இனத்திற்கு நிர்வாகம் மூலம் வசூல் செய்யும் நடவடிக்கைக்கு குறைந்தபட்சம் 6 பணியாளர்களை உட்படுத்தப்பட வேண்டிய நிலையில் 6 பணியாளர்களின் மாத ஊதியம் மற்றும் இதர படிகள் (ரூ.1.80 லட்சம்) (ஓராண்டுக்கு உத்தேச தொகை ரூ.21,60,000/– மற்றும் இதர செலவினம்) மற்றும் துறை மூலம் வசூல் செய்வதற்கு தேவையான ரசீது புத்தகம் அச்சடிக்கும் செலவினம் மற்றும் பராமரிப்பு செலவினம் ஆகியவற்றை கணக்கிடும் பட்சத்தில் வசூல் தொகையை விட கூடுதலாக செலவினம் ஏற்படுவதுடன் நிர்வாகத்தின் அன்றாட பணிகளுக்கே போதிய பணியாளர்கள் இல்லாத பட்சத்தில் இப்பணிக்கென 6 பணியாளர்களை முற்றிலும் மாற்று பணி வழங்கினால் அன்றாட அத்தியாவசிய பணிகளில் தொய்வு ஏற்படுவதுடன் நிர்வாகத்திற்கு சில நடைமுறை சிக்கல்களை தவிர்க்கும் பொருட்டும் புதிய பேருந்து நிலைய காவலர் பணியினையும், துப்புரவு பணியினையும் மேற்படி குத்தகைதாரர் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்திற்கு கூடுதலாக கட்டணம் வசூல் செய்ய வழிவகை இல்லாத காரணத்தினாலும் நாள் ஒன்றுக்கு குறைந்தபட்சம் 600 பேருந்துகள் வந்து செல்லும் என்ற கணக்கின் அடிப்படையிலும் அதிவேக பேருந்துகள் பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லாமல் புறவழி சாலையில் செல்வதால் இவ்வினத்திற்கு ஒருவரும்

ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் கோர முன்வராத நிலையில் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி தொகை ரூ.25,00,000/- கோரிய திரு.தங்கம் சந்தோஷ் என்பவருக்கு 2018-2019-ம் ஆண்டிற்கான புதிய பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமம் வழங்க மன்றம் முடிவு செய்யலாம்.

(9391/2017/அ5)

<u>மன்றப்பொருள்</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய வடமேற்கில் உள்ள கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 14.02.2018–ல் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில் கீழ்க்கண்டவாறு பொதுஏல/ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் நடைபெற்றன.

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| | <u>ஒப்பந்தப்புள்ளி விவரம்</u> | |
| 1. | திரு. செ. மணிகண்டன்,<br>24, ஜி.ஆர்.பி. தெரு, விழுப்புரம். | 8,01,000/– |
| | <u>பொது ஏல நடவடிக்கைகள்</u> | ஏலத்தொகை தொகை ரூ. |
| 1. | திருமதி.செ. செந்தமிழ்ச்செல்வி<br>க/பெ. செல்லையயன்,<br>24, ஜி.ஆர்.பி. தெரு, விழுப்புரம். | 14,95,000/– |
| 2. | திருமதி. கே.ஜமுனா க/பெ. குமரேசன்,<br>257, ஜி.ஆர்.பி. தெரு, விழுப்புரம். | 14,90,000/– |
| 3. | திருமதி. எ. முத்தம்மாள் க/பெ. அண்ணாமலை,<br>14/3சி, விஸ்வலிங்கம் லே அவுட்,விழுப்புரம். | 14,75,000/– |

<u>அலுவலக குறிப்பு:-</u>

அ) பெறப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளி ரூ.8,01,000/– க்கு குறிப்பிடப்பட்டுள்ளதை ஏற்கப்படவில்லை.

ஆ) பொது ஏலத்தில் கலந்து கொண்ட மூவரில் திருமதி. செ.செந்தமிழ்ச்செல்வி என்பவர் கோரிய அதிக பட்ச ஏலக் கேள்வி தொகை ரூ.14,95,000/–ஐ நகர மன்ற தீர்மான எண்.728, நாள்.16.02.18ல் உறுதி செய்யப்பட்டு ரூ.14,95,000/– செலுத்தக் கோரி 19.02.2018–ல் அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டு தொகை செலுத்தாமல் காலம் கடத்தியதால் 26.03.2018 அன்று 24 மணி நேர இறுதி அறிவிப்பு வழங்கப்பட்டும் திருமதி.செ.செந்தமிழ்ச்செல்வி என்பவர் தொகை செலுத்த முன்வராததால் இரண்டாம் உயர்ந்தபட்ச ஏலக் கேள்விதாரர் திருமதி.கே.ஜமுனா என்பவருக்கு ஏலத் தொகை செலுத்த சம்மதக் கடிதம் கோரி அறிவிப்பு அனுப்பப்பட்டதில் சம்மந்தப்பட்டவர் சம்மதிக்க மறுத்ததுடன் ஏல முன்வைப்புத் தொகையினை திரும்ப தரக் கோரி உள்ளார்.

இ) வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு ஏலம் கோரி தொகை செலுத்தாத திருமதி. செ. செந்தமிழ்ச்செல்வி என்பவர் செலுத்திய ஏல முன் வைப்புத் தொகையினை (ரூ.4,00,000/–) பறிமுதல் செய்தும், அன்னாரையும் மற்றும் அவரது சார்பில் மனுவின்படி ஏலம் நடவடிக்கையில் கலந்து கொண்டு ஏலம் கோரிய திரு.கே.விஜயகுமார் என்பவரையும் குத்தகைதாரர் பட்டியலில் கருப்பு புள்ளி (Black List) வரிசையில் சேர்க்கவும் மறு ஏலம் விடுவதால் ஏற்படும் இழப்பிற்கு அன்னாரை பொறுப்பாக்கி தொகையினை வசூல் செய்ய நீதி மன்ற நடவடிக்கை எடுக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ஈ) ஏலம் ரத்து செய்த இனத்திற்கும், ஏலம் போகாத கிழக்கு பாண்டி ரோடு நீர்த்தேக்க தொட்டி வளாக மீன் நாளங்காடி இனத்திற்கும் மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும், குத்தகைக்கு ஒப்படைக்கும் வரை நிர்வாக வசூல் செய்யவும், ரசீது புத்தகங்கள் அச்சடிக்கும் செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(9391/2017/அ5)